சென்னை மாவட்ட
அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமா அத்
ஜமா அத்துல் உலமா பேரவை

CHENNAI DIST
AHLUS SUNNATH WAL JAMA'ATH
JAMA'ATHUL ULAMA PERAVAI
Regd-No - 313/99

No.8,Angappan Street, chennai-600 001. www.ulama.in E-mail: jamathululama.chennai@gmail.com

தலைவர்
மவ்லவி அல்ஹாஜ்
K.M. சையது அபுதாஹிர் ஸிராஜி
செல்: 9444494628

செயலாளர்
மவ்லவி அல்ஹாஜ்
A. காஜா முயீனுத்தீன் ஜமாலி M.A.M.Phil
செல்: 9841972722

பொருளாளர்
அல்ஹாபிழ், அல்ஹாஜ்
K.A. காதர் முஹ்யித்தீன் மிஸ்பாஹி M.A
செல்: 9884431344

WWW. ULAMA. IN என்ற முகவரியிலும் BAYAN NOTES எடுக்கலாம்

بسم الله الرحمن الرحيم

# சோதனைகளை நீக்கும் துஆயே யூனுஸ் (அலை)

**06–03–2020**
**rajab- 10**

சோதனைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புப் பெறுவதில் நம் முன்னோர்கள் கடைபிடித்த வழி முறைகளை விட்டும் நம் சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்று கொண்டிருக்கிறது. திக்ருகள் மீதும் துஆக்கள் மீதும் நமக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. அதனால் தான் பல சோதனைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு மசோதாவை ஆங்கிலேயர்கள் அறிமுகப் படுத்தியபோது அப்போதைய நம்முடைய மூத்த உலமாக்கள் சில திக்ருகளை ஓதும்படி வலியுறுத்தினார்கள். குறிப்பாக லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அழீம் என்ற திக்ரை தினமும் **500** தடவைகள் ஓதும்படி அறிவுரை கூறினார்கள். அதன்படி முஸ்லிம்கள் நம்பிக்கையுடன் ஓதினார்கள். அல்லாஹ்வின் கிருபையால் சில நாட்களிலேயே அந்த சட்டம் வாபஸ் பெறப்பட்டது. இப்போதும் நமது மூத்த உலமாக்கள் சில திக்ருகளை ஓதும்படி நமக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் துஆயே யூனுஸை **11** தடவை அனைவரும் சேர்ந்து ஓதி பிறகு துஆ ஓதும்படி ஆலோசனை வழங்கியுள்ளார்கள். இதையேனும் நாம் செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்

وَذَا النُّونِ إِذْ ذَهَبَ مُغَاضِبًا فَظَنَّ أَنْ لَنْ نَقْدِرَ عَلَيْهِ فَنَادَى فِي الظُّلُمَاتِ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ (87 يونس)

நபி யூனுஸ் தன் உம்மத்தினருக்கு இஸ்லாமை எடுத்துக் கூறியும் கேட்காததால் அல்லாஹ்விடம் அவர்களின் மீது வேதனையை இறக்க துஆ செய்தார்கள். அல்லாஹ்வும் அதை ஏற்றுக் கொண்டு இந்த நாளில் வேதனை வரும் என்று அறிவித்தான் அதை அப்படியே அந்த மக்களிடம் நபி யூனுஸ் அலை கூறினார்கள் அப்பொழுது அந்த மக்களுக்கு பயம் வந்தது அவர்கள் அனைவரும் ஒரு மைதானத்தில் ஒன்று கூடி பெரியவர்கள், சிறியவர்கள், கால்நடைகள் என எல்லோரும் ஒன்று கூடி துஆ செய்ததால் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருந்த வேதனையை அல்லாஹ் ரத்து செய்தான் இதற்கிடையே வேதனை வரும் என்று அறிவித்த நபி யூனுஸ் அலை ஊரை விட்டும் வெளியேறிச் சென்று விட்டார்கள் அல்லாஹ் அறிவித்தும் கூட இப்படி வேதனை வராமல் ஆகி விட்டதே என்ற அதிருப்தியுடன் அவர்கள் வெளியேறியதாலும், அல்லாஹ்வின் அனுமதியின்றி வெளியேறியதால் அல்லாஹ் அவர்களை தண்டித்தான்.

**நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அந்த துஆவைக் கேட்க காரணமாக இருந்த சம்பவம்**

قَالَ اِبْن مَسْعُود وَابْن عَبَّاس وَغَيْرهمَا رضي الله عنهم وَذَلِكَ أَنَّهُ ذَهَبَ بِهِ الْحُوت فِي الْبِحَار يَشُقّهَا حَتَّى اِنْتَهَى بِهِ إِلَى قَرَار الْبَحْر فَسَمِعَ يُونُس تَسْبِيح الْحَصَى فِي قَرَاره فَعِنْد ذَلِكَ وَهُنَالِكَ قَالَ "لَا إِلَه إِلَّا أَنْتَ سُبْحَانك إِنِّي كُنْت مِنْ الظَّالِمِينَ" وقيل" فَلَمَّا اِنْتَهَى بِهِ إِلَى أَسْفَل الْبَحْر سَمِعَ يُونُس حِسًّا فَقَالَ فِي نَفْسه مَا هَذَا ؟ فَأَوْحَى اللَّه إِلَيْهِ وَهُوَ فِي بَطْن الْحُوت إِنَّ هَذَا تَسْبِيح دَوَابّ الْبَحْر قَالَ وَسَبَّحَ وَهُوَ فِي بَطْن الْحُوت وَقَالَ عَوْف الْأَعْرَابِيّ لَمَّا صَارَ يُونُس فِي بَطْن الْحُوت ظَنَّ أَنَّهُ قَدْ مَاتَ ثُمَّ حَرَّكَ رِجْلَيْهِ فَلَمَّا تَحَرَّكَتْ سَجَدَ مَكَانه ثُمَّ نَادَى يَا رَبّ اِتَّخَذْت لَك مَسْجِدًا فِي مَوْضِع لَمْ يَبْلُغهُ أَحَد مِنْ النَّاس وَقَالَ سَعِيد بْن أَبِي الْحَسَن الْبَصْرِيّ مَكَثَ فِي بَطْن الْحُوت أَرْبَعِينَ يَوْمًا (تفسير ابن كثير

விளக்கம்- நபி யூனுஸ் அலை அவர்கள் கடலின் ஆழத்தில் இருந்த போது கடலில் உள்ள அனைத்து பொடிக் கற்களும் மண்ணும் மணலும் தஸ்பீஹ் செய்வதை உணர்ந்தார்கள். பின்பு அவர்களும் தஸ்பீஹ் செய்தார்கள். மற்றொரு அறிவிப்பில் நபி யூனுஸ் அலை அவர்கள் கடலின் ஆழத்தில் இருந்த போது கடலில் உள்ள அனைத்து உயிர் வகைகளும் தஸ்பீஹ் செய்வதை உணர்ந்தார்கள். பின்பு அவர்களும் தஸ்பீஹ் செய்தார்கள். என்றும் கூறப்பட்டுள்ளது

**இந்த துஆவை சோதனையான நேரத்தில் ஓதும் முஃமின்கள் அனைவருக்கும் ஈடேற்றம் கிடைக்கும் என்ற வசனம்**

فَاسْتَجَبْنَا لَهُ وَنَجَّيْنَاهُ مِنَ الْغَمِّ وَكَذَلِكَ نُنْجِي الْمُؤْمِنِينَ (88) أَيْ إِذَا كَانُوا فِي الشَّدَائِد وَدَعَوْنَا مُنِيبِينَ إِلَيْنَا وَلَا سِيَّمَا إِذَا دَعَوْا بِهَذَا الدُّعَاء فِي حَال الْبَلَاء.. عن سَعْد ابْنِ أَبِي وَقَّاص رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ مَرَرْت بِعُثْمَان بْن عَفَّان رَضِيَ اللَّهُ عَنْهُ فِي الْمَسْجِد فَسَلَّمْت عَلَيْهِ فَمَلَأَ عَيْنَيْهِ مِنِّي ثُمَّ لَمْ يَرُدّ عَلَيَّ السَّلَام فَأَتَيْت عُمَر بْن الْخَطَّاب فَقُلْت يَا أَمِير الْمُؤْمِنِينَ هَلْ حَدَثَ فِي الْإِسْلَام شَيْء مَرَّتَيْنِ قَالَ لَا وَمَا ذَاكَ قُلْت لَا إِلَّا أَنِّي مَرَرْت بِعُثْمَان آنِفًا فِي الْمَسْجِد فَسَلَّمْت عَلَيْهِ فَمَلَأَ عَيْنَيْهِ مِنِّي ثُمَّ لَمْ يَرُدّ عَلَيَّ السَّلَام قَالَ فَأَرْسَلَ عُمَر إِلَى عُثْمَان فَدَعَاهُ فَقَالَ مَا مَنَعَك أَنْ لَا تَكُون رَدَدْت عَلَى أَخِيك السَّلَام قَالَ مَا فَعَلْت قَالَ سَعْد قُلْت بَلَى حَتَّى حَلَفَ وَحَلَفْت قَالَ ثُمَّ إِنَّ عُثْمَان ذَكَرَ فَقَالَ بَلَى وَأَسْتَغْفِر اللَّه وَأَتُوب إِلَيْهِ إِنَّك مَرَرْت بِي آنِفًا وَأَنَا أُحَدِّث نَفْسِي بِكَلِمَةٍ سَمِعْتهَا مِنْ رَسُول اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا وَاَللَّه مَا ذَكَرْتهَا قَطُّ إِلَّا تَغْشَى بَصَرِي وَقَلْبِي غِشَاوَة قَالَ سَعْد فَأَنَا أُنَبِّئك بِهَا إِنَّ رَسُول اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَكَرَ لَنَا أَوَّل دَعْوَة ثُمَّ جَاءَ أَعْرَابِيّ فَشَغَلَهُ حَتَّى قَامَ رَسُول اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاتَّبَعْته فَلَمَّا أَشْفَقْت أَنْ يَسْبِقنِي إِلَى مَنْزِله ضَرَبْت بِقَدَمِي الْأَرْض فَالْتَفَتَ إِلَيَّ رَسُول اللَّه فَقَالَ "مَنْ هَذَا أَبُو إِسْحَاق" قَالَ قُلْت نَعَمْ يَا رَسُول اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ "فَمَه" قُلْت لَا وَاَللَّه إِلَّا أَنْ ذَكَرْت لَنَا أَوَّل دَعْوَة ثُمَّ جَاءَ هَذَا الْأَعْرَابِيّ فَشَغَلَك قَالَ " نَعَمْ دَعْوَة ذِي النُّون إِذْ هُوَ فِي بَطْن الْحُوت "لَا إِلَه إِلَّا أَنْتَ سُبْحَانك إِنِّي كُنْت مِنْ الظَّالِمِينَ" فَإِنَّهُ لَمْ يَدْعُ بِهَا مُسْلِم رَبّه فِي شَيْء قَطُّ إِلَّا اِسْتَجَابَ لَهُ "(أحمد—باب:مسند سعد بن ابي وقاص

ஸஃது இப்னு அபீ வக்காஸ் ரழி அவர்கள் ஒரு முறை மஸ்ஜிதில் உஸ்மான் ரழி அவர்களை பார்த்து ஸலாம் கூற, அப்போதுஏதோ ஓதிக் கொண்டிருந்த உஸ்மான் ரழி அவர்கள் ஸஃது ரழி அவர்களை நன்றாக பார்த்த பிறகும் ஸலாமுக்கு பதில் கூறாமல் இருந்து விட, உடனே ஸஃது ரழி அவர்கள் ஜனாதிபதி உமர் ரழி அவர்களிடம் இஸ்லாத்தில் ஏதேனும் புதிய கட்டளைகள் வந்துள்ளதா ? என்று கூறி முறையிட, உடனே அவர்கள் உஸ்மான் ரழி அவர்களை அழைத்து விசாரிக்கிறார்கள் அப்போது உஸ்மான் ரழி அவர்கள் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என மறுக்க, ஸஃது ரழி அவர்கள் நடந்ததை சத்தியமிட்டு கூறிய போது, சற்று யோசித்து விட்டு உஸ்மான் ரழி அவர்கள் “ நான் யூனுஸ் அவர்களுடைய துஆவை மன ஓர்மையுடன் ஓதிக் கொண்டிருந்ததால் என் கண்கள் குருடாகி விட்டதைப் போன்றாகி விட்டது. என் உள்ளம் முழுவதும் அந்த தஸ்பீஹ் நிரம்பி இருந்ததால் நீங்கள் ஸலாம் சொன்னதை நான் கவனிக்கவில்லை என உஸ்மான் ரழி கூறிவிட்டு, அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்பும் கேட்டார்கள். அப்போது ஸஃது ரழி அவர்கள் அந்த துஆவைப் பற்றி தனக்குத் தெரிந்த தகவலையும் கூறுகிறார்கள். அதாவது நபி ஸல் அவர்கள் ஒரு முறை “ முதல் துஆ…என்று ஏதோ துஆவின் சிறப்பை சொல்ல ஆரம்பித்த போது ஒரு கிராமவாசி வந்து ஏதோ கேட்டு, நபி ஸல் அவர்களின் கவனத்தை திசை திருப்ப, நபி ஸல்அவர்கள் அவர் பின்னால் சென்று விட்டார்கள்.நபி ஸல் வீட்டுக்குப்புறப்படும் போது நான் என் காலால் தரையில் தட்டி அவர்களுக்கு நினைவூட்டினேன்.அப்போது தான் அவர்கள் மீன் வயிற்றுக்குள் நபி யூனுஸ் அலை ஓதிய துஆ தான் அந்த துஆ..எவர் அதை ஓதி துஆ கேட்பாரோ அவருடைய கோரிக்கை நிறைவேறும் என்றார்கள்.

**சோதனைகள் நீங்கினாலும் இந்த தஸ்பீஹை அடிக்கடி ஓதும் பழக்கம் நம்மிடம் வர வேண்டும்.**

ஆழ்கடல் இருளில் தன் சோதனையை நீக்கும்படி இருவர் துஆ செய்தனர். அதில் ஒருவரின் பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். ஏனெனில் அவர் சிரமத்தின் போது மட்டும் அல்லாஹ்வை நினைவு கூறுபவர் அல்ல. எப்போதும் அல்லாஹ்வை நினைவு கூறுபவர். அதனால் அவரது சிரமத்தை அல்லாஹ் நீக்கினான். அவர்கள் தான் நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம்.(இன்னொருவன் ஃபிர்அவ்ன் -அவனும் செங்கடலில் மூழ்கடிக்கப்படும் இறுதி நேரத்தில் தான் அல்லாஹ்வை ஏற்று அல்லாஹ்விடம் தம்மை காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்தான் ஆனால் அவனது ஈமானும் ஏற்கப்படவில்லை அவன் காப்பாற்றப்படவுமில்லை. ஏனெனில் அவன் தனக்குக் கஷ்டம் வரும்போது மட்டுமே அல்லாஹ்வை அழைத்தான். அதேபோல சில முஸ்லிம்கள் சிரமமான நேரங்களில் மட்டும் அல்லாஹ்வைத் தொழுது சந்தோஷமான நேரங்களில் அல்லாஹ்வை மறந்து விடுவார்கள். இவர்களை அல்லாஹ் பொருட்படுத்த மாட்டான்

**துஆயே யூனுஸ் என்பது பாவ மன்னிப்பின் வாசகம். சோதனைகள் தொடருவதற்கு நம்முடைய பாவங்களும் காரணம் என்ற சிந்தனை பலருக்கு இருப்பதில்லை.**

ஷாம் தேசத்திற்கு உமர் ரழி அவர்கள் அனுப்பியிருந்த படைப் பிரிவுகளில் ஓர் படைப்பிரிவில் இடம் பெற்றிருந்த தூதுவர் ஒருவர் உமர் ரழ் அவர்களிடம் வந்து அமீருல் முஃமினீன் அவர்களே நமது இஸ்லாமியப் படை வெற்றி பெற்று விட்டது. அல்லாஹ் நமது படைப் பிரிவுக்கு வெற்றியை நல்கினான் என்று கூறியபோது உமர் ரழி அவர்கள் எப்போது நமது படை வீர ர்கள் எதிரிப்ப்படையுடன் போரிட ஆரம்பித்தார்கள் என்று கேட்டார்கள் அதற்கு அவர் லுஹா நேரத்திற்கு சற்று முன்னதாக என்று பதில் கூறினார். மீண்டும் உமர் ரழி அவர்கள் எப்போது முஸ்லிம் படையினருக்கு வெற்றி கிடைத்த து என்று கேட்டார்கள். அதற்கு அவர் மஃரிப் நேரத்திற்கு சற்று முன்னதாக என்று பதில் கூறினார். இந்த பதிலைக் கேட்டதும் உமர் ரழி அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். அழுகையின் உச்ச கட்டமாக தாடி முழுவதும் நனைய தேம்பித் தேம்பி அழுதார்கள். சபையில் இருந்தவர்கள் உமர் ரழி அவர்களை சமாதானப்படுத்த முயற்சி செய்தார்கள். எனினும் உமர் ரழி அவர்கள் அழுகையை நிறுத்தவில்லை. அப்போது சபையில் இருந்தவர்கள் அமீருல் முஃமினீன் அவர்களே அவர் இப்போது என்ன சொல்லி விட்டார் என்று நீங்கள் அழுகிறீர்கள் அவர் நல்ல செய்தியைத்தானே சொல்லியுள்ளார். நமது படை வெற்றி பெற்ற செய்தி மகிழ்ச்சியான செய்தி தானே என்றனர். அதற்கு உமர் ரழி அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக அசத்தியத்திற்கு எதிரான அறப்போராட்டத்தில் சத்தியத்தின் வெற்றி இவ்வளவு வநேரம் வரை தாமதம்ஆகாது.அப்படியானால் நான் ஏதாவது பாவம் செய்திருக்க வேண்டும்.அல்லது மக்களாகிய நீங்கள் பாவம் செய்திருக்க வேண்டும். என பதில் கூறினார்கள்

**பாவ மன்னிப்பு என்பது நாம் கேட்கும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப் படுவதற்கு வழி வகுக்கும்.**

كان الإمام أحمد بن حنبل في مدينة غريبة لا يعرفه أهلها وقرر بعد أن بلغ به التعب مبلغه أن ينام في المسجد فرآه حارس المسجد فرفض أن يمكث فيه فقال الإمام سوف أنام موضع قدمي فقط ونام الإمام موضع قدمه فقام الحارس بسحبه من قدميه وأخرجه من المسجد وكان الإمام أحمد شيخا وقورا تبدو على وجهه ملامح التقوى والصلاح، فلما رآه خباز بهذه الهيئة عرض عليه أن يحضر لينام في منزله، فذهب معه ولاحظ الإمام أحمد أن الخباز وهو يقوم بعمله في عجن العجين وخبز الخبز أنه يستغفر ويستغفر ويستغفر، فلما رأى الإمام حال هذا الخباز مع الاستغفار استأذنه أن يسأله سؤالاً، وكان الإمام يعرف أن للاستغفار فوائد عظيمة.فقال له هل وجدت لاستغفارك هذا ثمرة، فأجابه الخباز: نعم.. أنا والله كلما دعوت الله دعوة استجابها لي ما عدا دعوة واحدة قال له الإمام أحمد وما هي هذه الدعوة التي لم تستجب؟ فقال الإمام: أنا الإمام أحمد بن حنبل، والله إني جررت إليك جراً (

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ் அவர்கள் ஒரு ஊருக்குச் சென்ற போது மிகவும் களைப்புடன் ஒரு மஸ்ஜிதில் சிறிதுநேரம் தங்க அனுமதி கேட்டார்கள். ஆனால் அங்குள்ள காவலர் இமாம் அவர்களை யாரென்று அறியாத தால் அங்கு தங்க அனுமதி மறுத்து விட்டார். காலைப் பிடித்தி இழுத்து வெளியேற்றினார். சோர்வுடன் திரும்பிய இமாம் அவர்களை ஒரு ரொட்டி வியாபாரி சந்தித்தார். அவருக்கும் இமாம் அவர்களை அடையாளம் தெரியாது. இருப்பினும் இரக்கப்பட்டு தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கு தங்கியிருந்த நேரங்களில் அந்த ரொட்டி வியாபாரி ரொட்டி சுடும்போதெல்லாம் அஸ்தஃபிருல்லாஹ் என்று ஓயாமல் கூறுவதைக் கண்ட இமாம் அவர்கள் ஆச்சரியப்பட்டு அவரிடம் இந்த இஸ்திஃபார் மூலம் உங்களுக்கு பலன்கல் கிடைத்துள்ளதா என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் நான் என்ன துஆ கேட்டாலும் அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்வான் என்றார். பிறகு கவலையுடன் ஒரு துஆ மட்டும் நான் நீண்ட காலமாக கேட்டும் நிறைவேற்றப் படவில்லை என்றவுடன் அது என்ன துஆ என இமாம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் நான் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ் அவர்கள் பற்றி நிறைய கேள்விப் பட்டுள்ளேன். நீண்ட காலமாக இமாம் அவர்களை சந்திக்க வேண்டும். என துஆ கேட்டு வருகிறேன். அதுதான் இதுவரை நிறைவேவில்லை என்றவுடன் ஒரு கணம் அதிசயித்துப் போன இமாம் அவர்கள் நான் தான் அஹ்மது இப்னு ஹன்பல். உங்களின் துஆவை அல்லாஹ் அங்கீகரிப்பதற்காக என் காலைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து உங்களிடம் சேர்த்துள்ளான்